# Chapter – 1.4

# வளரும் செல்வம்

## கற்பவை கற்றபின்

**Question 1.**
நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம் பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ் சொற்களை அறிந்து எழுதுக.

| சொற்பட்டியல் | பிறமொழிச் சொற்கள் | நிகரான தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|
| வகுப்பு, புத்தகம், பிளாக் போர்டு, பேனா, பென்சில், நோட்டு, | ப்ளாக்போர்டு (BLACK BOARD) | கரும்பலகை |
| ……………………………… | ……………………………… | ……………………………… |
| ……………………………… | ……………………………… | ……………………………… |

**Answer:**

| சொற்பட்டியல் | பிறமொழிச் சொற்கள் | நிகரான தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|
| வகுப்பு, புத்தகம், பிளாக் போர்டு, பேனா, பென்சில், நோட்டு. | பிளாக் போர்டு (Blackboard) | கரும்பலகை |
| வகுப்பு | கிளாஸ்ரூம் (Classroom) | வகுப்பறை |
| புத்தகம் | புக் (Book) | பாடநூல் |
| பேனா | பென் (Pen) | தூவல் |
| பென்சில் | ப்பென்சில் (Pencil) | கரிக்கோல் |
| நோட்டு | நோட் (Note) | குறிப்பேடு |
| ரப்பர் | எரேஸர் (Eraser) | மென்மம் |

**Question 2.**
உரையாடலை நிறைவு செய்க. அவற்றுள் இடம்பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம்செய்க.
அருண் : ஹலோ! நண்பா !
நளன் : ………………………………

அருண் : உன்னைப் பார்த்துப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இல்லையா?
நளன் : ஆமாம்! பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன நீ என்ன செய்கிறாய். இப்போது நான்
பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் மேலாளராக பணி புரிகிறேன், நீ…..

அருண் : ………………………………
நளன் : அந்தக் கல்லூரியில் தான் என் தம்பி வணிகவியல் முதலாமாண்டு படிக்கிறான்.
அருண் : ………………………………
நளன் : மீண்டும் பார்க்கலாம்.

**Answer:**
அருண் : ஹலோ! நண்பா !
நளன் : வணக்கம் நண்பா .
அருண் : உன்னைப் பார்த்துப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இல்லையா?

நளன் : ஆமாம்! பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன நீ என்ன செய்கிறாய். இப்போது நான்
பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் மேலாளராக பணி புரிகிறேன், நீ…..

அருண் : நான் நந்தனம் அரசுக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிகிறேன்.
நளன் : அந்தக் கல்லூரியில் தான் என் தம்பி வணிகவியல் முதலாமாண்டு படிக்கிறான். அருண் : மிக்க நன்றி, மீண்டும்

சந்திப்போம்.
நளன் : மீண்டும் பார்க்கலாம்.

## பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**Question 1.**
குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.

| குழு 1 | குழு 2 | குழு 3 | குழு 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ----- | ----- | ----- | ----- |
| தோணி | மர | விருத்தம் | காரணவினை |

அ) வங்கம், மானு, தாழிசை, பிறவினை
ஆ) தாழிசை, மானு, பிறவினை, வங்கம்
இ) பிறவினை, தாழிசை, மானு, வங்கம்
ஈ) மானு, பிறவினை, வங்கம், தாழிசை

**Answer:**
அ) வங்கம், மானு, தாழிசை, பிறவினை

## குறுவினா

**Question 1.**
கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களை தருக.
i) Moniter – திரை
ii) Mouse – நகர்த்தி (அல்லது) சுட்டி
iii) Keyboard – விசைப்பலகை
iv) CD – குறுந்தட்டு
v) Download – பதிவிறக்கம்

vi) File – கோப்பு
vii) E-Mail – மின்ன ஞ்சல்

## சிறுவினா

**Question 1.**
சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?

**Answer:**
சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொற்கள் கிரேக்க மொழியிலும் மாற்றம் பெற்றுள்ளன.

| தமிழ் | எறிதிரை | கலன் | நீர் | நாவாய் | தோணி |
|---|---|---|---|---|---|
| கிரேக்கம் | எறுதிரான் | கலயுகோய் | நீரியோஸ் / நீரிய | நாயு | தோணீஸ் |

**Question 2.**
வளரும் செல்வம் – உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அதற்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.

**Answer:**

| பிறமொழிச் சொற்கள் | சாப்ட்வேர் | லேப்டாப் | ப்ரௌசர் | சைபர்ஸ்பேஸ் | சர்வர் |
|---|---|---|---|---|---|
| தமிழ்ச் சொற்கள் | மென் பொருள் | மடிக்கணினி | உலவி | இணையவெளி | வையக விரிவு வலை |

## கூடுதல் வினாக்கள்

## குறுவினா

**Question 1.**
கடற்கலன்களுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

**Answer:**
நாவாய், வங்கம், தோணி, கலம்.

## சிறுவினா

**Question 1.**
தமிழில் கணினி தொடர்பான சொற்களைப் பட்டியலிடுக.

**Answer:**

- சாப்ட்வேர் – மென்பொருள்
- கர்சர் – ஏவி அல்லது சுட்டி
- க்ராப் – செதுக்கி
- போல்டர் – உறை

**தமிழ் எண்கள் அறிவோம்.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சா | எ | அ | கூ | க0/௰ |

**தமிழ் எண்களில் எழுதுக.**

| | |
|---|---|
| பன்னிரண்டு – கஉ | பதின்மூன்று – கங |
| நாற்பத்து மூன்று – சங | எழுபத்தெட்டு – எஅ |
| தொண்ணூறு – கூ0 | |